

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.4.2025) முகாம் அலுவலகத்தில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

### தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து செயல்பட

# ரூ.2 கோடி நிதி வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

## தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவல் குழுத் தலைவர் ப.சிதம்பரம் – தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் ம.இராசேந்திரன் அறிக்கை!





சென்னை, ஏப்.18-

**தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து செயல்பட இரண்டு கோடி ரூபாய் நிதி வழங்கிய தமிழ்நாடு அரசுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவல் குழுத் தலைவரும் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சருமான ப.சிதம்பரம் எம்.பி., தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவரும் அறங்காவல் குழு செயலாளரும் தஞ்சைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தருமான ம.இராசேந்திரன் ஆகியோர் நன்றி தெரிவித்துள்ளனர்.**

இதுகுறித்து தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் இவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :-

“செயற்கை நுண்ணறிவுக் காலத்திற்கேற்பத் தமிழ் மொழியை வளர்த்தெடுக்கத் தேவைப்படும் தமிழ்த் தரவகம் உருவாக்கவும் சிறப்புக் கலைக் களஞ்சியங்கள் போன்ற திட்டப்பணிகளைத் தமிழ் வளர்ச்சிக்கழகம் மேற்கொள்ளவும் தொடர்ந்து தொய்வின்றிச் செயற்பட உதவும் வகையில் வைப்புத் தொகையாக ரூபாய் 2 கோடி வழங்கப்படும்.” என்று சட்டமன்றத்தில் அறிவிக்கச் செய்து தமிழ் வளர்ச்சிக் கழத்திற்குப் புத்துயிர் வழங்கியிருக்கும் முதல்வர் அவர்களுக்கு நன்றி.

‘கலைக்களஞ்சியம்’ என்ற அரிய செல்வத்தைத் தமிழில் உருவாக்கி, எல்லாத் துறைகளிலும் தமிழ்மொழி தழைத்து ஓங்குவதற்கு வழிகாட்டிய பெருமைக்குரியது தமிழ் வளர்ச்சிக் கழகம். ‘கலைக்களஞ்சியம்’ என்ற பொருள் பொதிந்த சொல்லைத் தமிழகத்திற்கு வழங்கிய பெருமையும் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கே உரியதாகும். இப்பொழுது “Encyclopaedia” என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான புத்தாக்கச் சொல்லாகத் தமிழறிஞர் அனைவராலும் “கலைக் களஞ்சியம்” என்ற சொல் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இச்சொல் தமிழ் வழக்கிலும் வேரூன்றி நிலைத்துவிட்டது.

**கலைக்களஞ்சியம் உருவாக்கிய பெருமை!**

இந்திய மொழிகளிலேயே முதன்முதலில் கலைக்களஞ்சியம் உருவாக்கிய பெருமையைத் தமிழுக்கு ஈட்டித் தந்த சிறப்பு தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கே உண்டு. தமிழ் வளர்ச்சிக் கழகத்தை உருவாக்கியவர் அப்போது சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக (1946 1949) இருந்த தி.சு.அவினாசிலிங்கம். இவர்தான் தமிழ் வழிக் கல்வியை அறிமுகம் செய்தவர்.

தற்போது தமிழ் வளர்ச்சிக் கழக அறக்கட்டளைக்குத் தலைவராக மேனாள் ஒன்றிய நிதி அமைச்சர் திரு ப.சிதம்பரம் அவர்கள் இருக்கிறார்கள். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகத் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர் ம.இராசேந்திரன் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்தியா விடுதலை அடைவதற்கும் முன்பாகவே 1946 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டிருக்கிறது தமிழ் வளர்ச்சிக்கழகம். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உயரிய குறிக்கோளாகிய கலைக்களஞ்சியத் திட்டத்தைத் தி.சு.அவினாசிலிங்கம் அவர்கள் இந்திய விடுதலை நாளான 15.08.1947 அன்று அறிவித்திருக்கிறார்கள். அப்போதைய ஒன்றிய நிதியமைச்சர் திரு ஆர்.கே. சண்முகம், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ. இலட்சுமனசாமி, வடபாதி மங்கலம் வி.எஸ்.தியாகராஜன், டி.கே. சிதம்பரநாதன், மீ.ப.சோமு, கல்கி ஆகியோர் துணையுடன், பெரியசாமித்தூரனைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இம்மாபெரும் பணியைத் தொடங்கியிருக்கிறார்.

**ஜவஹர்லால் நேரு வெளியிட்ட கலைக்களஞ்சியம்!**

*1954 இல் முதல் தொகுதியையும் 1968 இல் 10 வது தொகுதியையும் வெளியிட்டிருக்கிறது. இதற்கு 207 அறிஞர்கள், கட்டுரைகள் வழங்கியுள்ளனர்; 2240 அறிஞர்கள் பங்களிப்புச் செய்திருக்கின்றனர். 10 தொகுதிகளும் ஏறத்தாழ 7500 பக்கங்களில் வெளிவந்துள்ளன. கலைக்களஞ்சியத்தின் ஐந்தாவது தொகுதியை அன்றைய இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.*

*மேலும் குழந்தைகள் கலைக் களஞ்சியம், மருத்துவக் களஞ்சியம், சித்த மருத்துவக் களஞ்சியம் என்று 60க்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ளது. பொதுமக்களுக்கும் விளங்கக்கூடிய நடையில், அறிவுத் துறைகள் அனைத்தையும் திறம்பட எடுத்துரைப்பதாகவும், பல்துறை அறிவு பற்றிய பதிவுகளை அகரவரிசைப் படுத்தி, அவைகளைக் கட்டுரை வடிவில் தெளிவாக விளக்குவதாகவும் தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடுகள் உள்ளன.*

**தி.சு.அவினாசிலிங்கம் எழுதியுள்ள முகவுரை!**

*தமிழ் வளர்ச்சிக் கழகம் 20 121948 இல் வெளியிட்ட கலைக் களஞ்சிய மாதிரிப் படிவத்திற்குத் திரு. தி.சு. அவினாசிலிங்கம் எழுதியுள்ள முகவுரையில், “ஆங்கிலத்தில் பல பெரிய கலைக் களஞ்சியங்கள் (Encyclopaedia) இருக்கின்றன. மக்களுடைய அறிவை வளர்ப்பதற்கு அவை பெரிதும் பயன்படுகின்றன. அவை போன்ற புத்தகங்கள் தமிழில் இல்லாதது ஒரு பெருங்குறையாகும். நமது நாட்டின் சாதாரண மக்களின் அறிவு உயர வேண்டுமானால் இத்தகைய நூல்கள் நமது மொழியில் வெளிவருவது அவசியம்.” என்று குறிப்பிட்டிருக்கிறார்,*

*தமிழ் வளர்ச்சித்துறை, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அகர முதலித் திட்டம், தமிழ்ப் பல்கலைக்கழகம் போன்ற தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கான துறைகளும் நிறுவனங்களும் தொடங்குவதற்கு ஊற்றுக் கண்ணாக விளங்கி யிருக்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகம். கலைக் களஞ்சியத் திட்டத்திற்கு நிதி உதவி வேண்டி 1947 இல் தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைத்துத் தரப்பு மக்களும் அவருடைய இந்த அறிவிப்பை வரவேற்றுத் தாமே மனமுவந்து நிதி வழங்கியிருக்கின்றனர்.*

*கலைக்களஞ்சியத்தின் திருந்திய இரண்டாம் பதிப்பை, ஒவ்வொரு தொகுதியும் 1000 பக்கங்களைக் கொண்டதாய், 12 தொகுதிகளில் வெளிக்கொணரப் பெரிதும் விரும்பியிருக்கிறார் திரு. தி.சு. அவினாசிலிங்கம் அவர்கள். அதற்காக 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அதற்குரிய திட்டமும் தயாரிக்கப்பட்டு, தொடக்க விழாவும் நடந்திருக்கிறது. பல்வேறு காரணங்களால் அத்திட்டம் நிறைவேறாமற் போயிருக்கிறது. கலைக் களஞ்சியத்தின் திருந்திய இரண்டாம் பதிப்பு வெளிவந்திருந்தால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் மேலும் பயன்படத் தக்கதாய் அமைந்திருக்கும்.*

**வணிக நோக்கு இல்லாத தமிழ் வளர்ச்சிக் கழகம்!**

*தமிழ் வளர்ச்சிக் கழகம் வணிக நோக்கு இல்லாதது; தமிழ் வளர்ச்சி ஒன்றையே நோக்காகக் கொண்டு இயங்குவது. தற்போது மாணவர் அகராதி, தமிழியல் களஞ்சியம், தமிழ்ச் சிந்தனைக் களஞ்சியம், சொல் புதிது, கலைக்களஞ்சியம் திருந்திய, மேம்படுத்திய பதிப்புத் திட்டம் ஆகிய பணிகளை மேற்கொள்ளத் தமிழ் வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டிருக்கிறது.*

*இப்படித் தற்காலத் தேவைக்கேற்பத் தொய்வின்றித் தமிழ் வளர்ச்சிப் பணிகளைத் தொடர ஏதுவாகத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்கு வைப்புத் தொகையாக இரண்டு கோடி ரூபாய் வழங்க ஆணையிட்டிருக்கிற முதல்வர் அவர்களுக்குத் தமிழ் வளர்ச்சிக்கழகமும் அறக்கட்டளையும் தமது தமிழ்ப் பணிகளால் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றன. உற்றுழி உதவி, ஊக்கம் தரும் நிதியமைச்சர் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சிச் துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கோரிக்கையை உள்ளன்போடு கருதிப் பார்த்து ஆதரவு காட்டியிருக்கும் நிதிச் செயலாளருக்கும் தமிழ் வளர்ச்சிச் செயலாளருக்கும் தமிழ் வளர்ச்சிக் கழகமும் அறக்கட்டளையும் மனதார நன்றி சொல்வதில் பெருமை கொள்கிறது.*

*இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*



# தி.மு.க. இளைஞர் அணி

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கும் மண்டலம் 9–இல், மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கும் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | 1 | அண்ணா நகர் | அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், பூந்தமல்லி நெடுஞ்சாலை, அமைந்தக்கரை |
| 19.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | 9 | தூத்துக்குடி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி |
| 19.04.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | | கோவில்பட்டி | சௌபாக்கியா மஹால், கோவில்பட்டி |
| 26.04.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | | விளாத்திகுளம் | ஜி.வி.மஹால் விளாத்திகுளம் |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 16-04-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### என்.எல்.சி. அங்கீகாரத் தேர்தல்,

# தொ.மு.ச. தனிச்சங்கமாக வெற்றி பெற்று, முதலமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டும்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையுரை! சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை!

கடலூர்,ஏப்.18–

என்.எல்.சி,ரகசிய வாக்கெடுப்பு,அங்கீகாரத்தேர்தலில் தொ.மு.ச வை தனிச்சங்கமாக வெற்றிபெறச் செய்து முதலமைச்சரிடம் வெற்றிச்சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும் என ஆலோசனக்கூட்டத்தில் அமைச்சர் சி.வெ.கணேசன் தொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நெய்வேலி என்.எல்.சி ரகசிய வாக்கெடுப்பு, அங்கீகார தேர்தலில் தொ.மு.ச வை தனிச்சங்கமாக வெற்றி பெறச்செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம், தொ.மு.ச அலுவலகம் கலைஞர் அரங்கத்தில், 16.4.2025,புதன்கிழமை மாலை 6மணியளவில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சருமான சி.வெ. கணேசன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். என்.எல்.சி, தொ.மு.ச., பொதுச்செயலாளரும்,பேரவை இணை பொதுச்செயலாளருமான என்.பாரி வரவேற்புரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச்சர் சி.வெ.கணேசன் பேசுகையில் வருகின்ற ஏப்ரல் 25 ஆம் தேதி நடைபெற உள்ள என்.எல்.சி நிறுவனத்தின் ரகசிய வாக்கெடுப்பு அங்கீகாரத் தேர்தலில் தொ.மு.ச வில் 3,500 உறுப்பினர்கள் உள்ளனர்.

தனிப்பெரும்பான்மைக்கு தேவையான வாக்குகள் நம்மிடம் உள்ளது. தோழமைக்கட்சி தொழிற்சங்கங்களின், ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளும் நம்மிடத்தில் உள்ளது.

எனவே நமது தொ.மு.ச உறுப்பினர்கள் அவரவர் வாக்குகளை செலுத்தினாலே நாம் எளிதில் தனிபெரும் சங்கமாக வெற்றி பெற முடியும். தொ.மு.ச, தனிச்சங்கமாக வெற்றி பெற்ற சான்றிதழை தமிழக முதல்வரிடம் சமர்ப்பித்து வாழ்த்து பெற வேண்டும் இவ்வாறு பேசினார். கூட்டத்தில் மாவட்டப் பொருளாளர் ஜி.தண்டபாணி, நகரச் செயலாளர் வி.குருநாதன், என்.எல்.சி தொ.மு.ச தலைவர் பா.திருமாவளவன், பொருளாளர் இரா.ஐயப்பன், அலுவலக செயலாளர் ஆர். ஜெரால்டு, தலைமை பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, முன்னாள் நகர செயலாளர் வி.பக்கிரிசாமி, முன்னாள் தொமுச தலைமை நிர்வாகிகள் ஆண்ட குருநாதன், சிவந்தான் செட்டி, வீர ராமச்சந்திரன், கலியன், நன்மாற பாண்டியன், ஸ்ரீதர், தொ.மு.ச. துணைத் தலைவர்கள், பகுதி செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், சி.பி. எப்., இயக்குனர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. சின்னச்சாமி

### ஏப்ரல் 18 (2005)



**கழகம் தொடங்கிய போதே உறுப்பினராகி கழகப் பணியாற்றி, தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – மதுரை மாநகராட்சி துணை மேயராகவும் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றியவர்.**

**1965–ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கு பெற்றதோடு, கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர்

# கோ.தளபதி எம்.எல்.ஏ. தாயார் மாரியம்மாள் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப் 18–

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வின் தாயார் மாரியம்மாள் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அவர்களின் தாயார் மறைவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மதுரை மாநகர் தி.மு.கழகச் செயலாளருமான கோ.தளபதி அவர்களின் தாயார் திருமதி மாரியம்மாள் அவர்கள் முதுமை காரணமாக மறைவெய்திய செய்தி அறிந்து வருந்துகிறேன்.

ஆளாக்கி வளர்த்த அன்பு அன்னையை இழந்து வாடும் தளபதி அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.எஸ். பாண்டியன்

### ஏப்ரல் 18 (2019)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.**

**சட்டக் கல்லூரியில் பயிலும் போதே மாணவர் அணியிலும், பின்னர் வழக்கறிஞராக பதிவு செய்த பின்னர் மாவட்ட வழக்கறிஞர் அணியிலும் பணியாற்றினார்.**

**மதுரை மாநகர் மாவட்டம், காமராஜபுரம் பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**